எச்.எம்.ஓ.பி.எண். 152/2023 – ம.சா.1 – 01.10.2024.

| Page No.4 | |
|---|---|
| **<u>சார்பு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்</u>** | |
| நாள் | 01.10.2024 |
| O.S. No. | 139/2018 |
| வா.சா.1 | பெருமாக்கவுண்டர் |

2024ம் ஆண்டு அக்டோபர் மாதம் 01–ம் நாள் பெருமாக்கவுண்டர் என்பவரின் சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1969ம் ஆண்டின் 54வது சட்டப்பிரிவு(2) ஏற்பாட்டின்படி திரு.எஸ்.ஜீவாபாண்டியன்,M.Com.,M.Phil.,M.L., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பெருமாக்கவுண்டர் | சமயம் | : |
| தந்தை பெயர் | ; | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூக்கா | : | | |

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

(சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது)

1. நான் நடுக்காவேரிபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் மேற்படி ஊரில் நான் பிறந்ததுமுதல் வசித்து வருகிறேன். எனக்கு ஒரு மகன் உள்ளார். பிரதிவாதியான சதீஸ்குமாருக்கு சுமார் 50 வயதுக்குள் இருக்கும். வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் பிரதிவாதிக்கு சுமார் 55 வயது இருக்கும் என வழக்குரைஞர் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிக்கு வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் 35 வயதுதான் இருக்கும் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் பிரதிவாதியை பார்த்ததில்லை என்றும் அதனால்தான் வயது பற்றி தவறாக வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல, சதீஸ்குமாரை பார்த்துள்ளேன்.
2. கடன் தொகையை எனது வீட்டில் வைத்து பிரதிவாதிக்கு

கொடுத்தேன். மேற்படி கடன் தொகை கொடுக்கும்போது எனது மகன் மற்றும் ஆவணத்தை எழுதிய பழனிச்சாமி ஆகியோர் உடன்



இருந்தார்கள். மேற்படி நபர்களை தவிர வேறு யாரும் இல்லை என்றால் சரிதான். கடன் தொகையை காலை 09.00 மணிக்கு கொடுத்தேன். பிரதிவாதி எத்தனை மணிக்கு எனது வீட்டிற்கு வந்தார் என்றால் காலை சுமார் 09.00 மணி இருக்கும். பழனிச்சாமி என்பவர் பிரதிவாதி வந்தபிறகு எவ்வளவு நேரத்தில் என் வீட்டிற்கு வந்தார் என்றால் பிரதிவாதி வந்தபிறகு எனது மகன் போன் மூலம் தகவல் சொன்னபிறகு பழனிச்சாமி வந்தார். நான் பழனிச்சாமியின் வீட்டிற்கு சென்று அவரை அழைக்கவில்லை என்றால் சரிதான். பழனிச்சாமி எனக்கு எப்படி பழக்கம் என்றால் சுமார் 30 வருடமாக அவர் எனக்கு பழக்கம். நான் 30 வருடமாக பழனிச்சாமியிடம் பால் வியாபாரம் செய்து வருகிறேன்.

3. பிரதிவாதி கடன் கொடுப்பதற்கு எத்தனை நாட்களுக்கு முன்பு கடன் கேட்டார் என்றால் 2 நாட்களுக்கு முன்பு கேட்டார். அவர் பணம் கேட்ட அன்றே நான் பணம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி பணம் கேட்ட அன்று என்னிடம் கையில் பணம் இல்லை என்றால் சரிதான். பிரதிவாதிக்கு பணம் கொடுப்பதற்கான தொகையை வங்கியிலிருந்து எடுத்து வந்தேனா என்றால் இல்லை, கடலை விற்ற பணம் மற்றும் பால் வியாபாரத்திலிருந்து கிடைத்த பணத்தை வைத்து கொடுத்தேன். கடலை விற்றதன் மூலம் பணத்தை எந்த வியாபாரியிடமிருந்து கடலைக்கான பணத்தை பெற்றேன் என்றால் பல நபர்களிடம் வியாபாரம் செய்ததால் யார் என்று தெரியாது. கடலை விற்ற பணம் எவ்வளவு வந்தது மற்றும் பால் வியாபாரம் பணம் எவ்வளவு வந்தது என்றால் தற்போது என்னால் சொல்ல முடியாது.
4. நான் எத்தனை பேருக்கு இதுபோல் கடன் கொடுத்துள்ளேன் என்றால் சுமார் 4 பேருக்கு வட்டிக்கு கடன் கொடுத்துள்ளேன். வட்டிக்கு கடன் கொடுக்கும் தொழில் எத்தனை வருடமாக செய்து கொண்டிருக்கிறேன் என்றால் சுமார் 10 வருடங்களுக்கு மேலாக செய்து வருகிறேன். யார் யார் எந்த தேதியில் எவ்வளவு பணம் வாங்கினார்கள் என்று கணக்கு எழுதி வைத்து அதன் மூலம்தான் பணம் வசூல் செய்வேன் என்றால் சரிதான். பிரதிவாதி எந்த தேதியில் கடன் வாங்கினார் என்று வரவு செலவு கணக்கு எழுதி வைத்துள்ளேனா என்றால் எழுதி வைத்துள்ளேன். மேற்படி வரவு செலவுக் கணக்குத்தாளை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல்

செய்துள்ளேனா என்றால் செய்யவில்லை.



5. எனது பெயரில் உள்ள சொத்தை எனது மகனுக்கு எழுதிக்கொடுத்துவிட்டேனா என்றால் இல்லை, எனது பெயரிலும் சொத்து உள்ளது. எனது மகனுக்கு விவசாய பூமி உள்ளது. என் மகன் பெயரில் சுமார் 10 அல்லது 15 வருடமாக விவசாய பூமி உள்ளதா என்றால் இல்லை, தற்போதுதான் உள்ளது. என் மகன் இன்று என்னுடன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் சரிதான்.
6. என் வீட்டின் ஆசாரத்தில் வைத்து கடனுறுதிச்சீட்டு எழுதப்பட்டது. ஆசாரத்திற்கு முன்பு முன் வாசல் உள்ளது என்றால் சரிதான். மேசையில் வைத்து கடனுறுதிச்சீட்டு எழுதப்பட்டதா என்றால் இல்லை, அட்டையின் மீது வைத்து எழுதினார், மேற்படி அட்டையை பழனிச்சாமி கொண்டுவந்தார். என் வீட்டிற்கு வந்த வா.சா.3 எவ்வளவு நேரம் என் வீட்டில் இருந்தார் என்றால் சுமார் 45 நிமிடங்கள் இருந்தார். என் வீட்டிலிருந்து பழனிச்சாமி முன்பே கிளம்பினாரா அல்லது சதீஸ்குமார் முன்பே கிளம்பினாரா என்றால் சதீஸ்குமார் முன்னரே கிளம்பினார், பின்னர்தான் பழனிச்சாமி கிளம்பினார். பழனிச்சாமி அவருடைய இருசக்கர வாகனத்தில் வந்திருந்தார். சதீஸ்குமார் எவ்வாறு வந்தார் என்றால் TVS இருசக்கர வாகனத்தில் வந்தார்.
7. கடனுறுதி சீட்டை பழனிச்சாமி வரும்போது வாங்கி வந்தார். கடனுறுதி சீட்டிற்கான முத்திரை வில்லைகளை யார் கொண்டுவந்தார்கள் என்று எனக்கு தெரியாது. கடனுறுதி சீட்டில் எத்தனை ரூபாய் முத்திரை வில்லைகள் ஒட்டப்பட்டது என்றால் 1ரூபாய் முத்திரை வில்லைகள் இரண்டு ஒட்டப்பட்டது. கடனுறுதி சீட்டை படித்து பார்த்தபிறகுதான் சதீஸ்குமார் பணத்தை வாங்கி எண்ணிப்பார்த்தாரா என்றால் ஆமாம். மேற்படி கடனுறுதி சீட்டில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள விவரங்களை நான் படித்துப்பார்த்தபிறகுதான் சதீஸ்குமாரிடம் பணத்தை கொடுத்தேனா என்றால் ஆமாம். பணம் கொடுப்பதற்கு முன்பு நான் பணத்தை எண்ணிப்பார்த்தேனா என்றால் ஆமாம். நான் ரூபாய் 500 பணத்தாள்களாக கொடுத்தேன். நான் பணத்தை ஆசாரத்தில் உள்ள பீரோவிலிருந்து எடுத்து கொடுத்தேன்.
8. கடனுறுதி சீட்டு எழுதுவதற்கான முகவரிகளை யார் சொன்னார்கள் என்றால் என்னுடைய முகவரியை நானும், சதீஸ்குமாரின் முகவரியை அவரும் சொன்னோம். கடனுறுதி சீட்டு எந்த நிற

மையினால் நிரப்பப்பட்டது என்றால் நிறம் தெரியாது. மேற்படி பேனா இங்க் பேனாவா லெட் பேனாவா என்று எனக்கு தெரியாது.



பழனிச்சாமி எழுதிய அதே பேனாவை வைத்துதான் கடனுறுதி சீட்டில் சதீஸ்குமார் கையொப்பம் செய்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, சாட்சி மீண்டும் அதே பேனாவில் கையொப்பம் செய்திருக்கலாம் என்று சொன்னார். கடனுறுதி சீட்டில் முத்திரை வில்லை மீது இரண்டு கையொப்பங்களையும், முத்திரை வில்லைகளுக்கு கீழே இரண்டு கையொப்பங்களையும் என மொத்தம் நான்கு கையொப்பங்களை சதீஸ்குமார் செய்தார். கடனுறுதி சீட்டில் சதீஸ்குமாரிடம் கையொப்பம் மட்டும் வாங்கினோமா என்றால் இல்லை கைரேகையும் வாங்கினோம். எத்தனை ரேகை வாங்கினோம் என்றால் மூன்று அல்லது நான்கு ரேகைகள் வாங்கியிருப்பார்கள்.

9. நான் பணத்தை 100ரூபாய்க்கு 1 ரூபாய் வட்டிக்கு கொடுத்தேன். கடனுறுதி சீட்டிலும் மேற்படி வட்டிதான் போடப்பட்டுள்ளது. மேற்படி வட்டியை பழனிச்சாமியிடம் நான்தான் சொன்னேன். கடனுறுதி சீட்டில் தமிழ்தேதி அல்லது ஆங்கிலத்தேதி எழுதப்பட்டதா என்றால் இரண்டும் எழுதப்பட்டது. பழனிச்சாமி நாட்காட்டியை பார்த்து தேதி குறிப்பிட்டார். எனது வீட்டிலிருந்த நாட்காட்டியை பார்த்து அவர் எழுதிக்கொண்டார்.

10. நான் வருமானவரி செலுத்துவதில்லை. வருமானவரி செலுத்தும் அளவிற்கு எனக்கு வருமானம் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் பிரதிவாதியின் சொத்தை ஜப்தி செய்துள்ளேனா என்றால் அது பற்றி வழக்குரைஞருக்குத்தான் தெரியும். ஜப்திசொத்து பிரதிவாதிக்கு பாத்தியம் என்பதை காட்டுவதற்கான ஆவணத்தை பார்த்தேனா என்றால் இல்லை.

11. மேற்படி சொத்திற்கான ஆவணம் என்னிடம் இல்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. பிரதிவாதியிடம் கடன் மற்றும் வட்டி தொகையை திரும்ப கேட்டேன், ஆனால் அவர் தர மறுத்துவிட்டார். பணம் கொடுத்து சுமார் 4 அல்லது 5 மாதங்கள் கழித்து சென்று கேட்டேன். பிரதிவாதி கடன் தொகையை திருப்பி செலுத்த மறுத்ததால் நான் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். நான் சொல்கிறபடி பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கவில்லை என்றும், எனக்கு கடனுறுதி சீட்டை எழுதி தரவுமில்லை என்றும் சொன்னால் சரியல்ல. கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பங்கள் பிரதிவாதியுடையது அல்ல என்றும், மேற்படி கையொப்பங்களை நாங்கள் மோசடியாக செய்துகொண்டோம் என்றால் சரியல்ல. இவ்வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால்

சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

| | |
|---|---|
| **சார்பு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்** | |
| நாள் | 01.10.2024 |
| O.S. No. | 139/2018 |
| வா.சா.2 | சி.வெள்ளியங்கிரி |

2024ம் ஆண்டு அக்டோபர் மாதம் 01–ம் நாள் சி.வெள்ளியங்கிரி என்பவரின் சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1969ம் ஆண்டின் 54வது சட்டப்பிரிவு(2) ஏற்பாட்டின்படி திரு.எஸ்.ஜீவாபாண்டியன்,M.Com.,M.Phil.,M.L., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சி.வெள்ளியங்கிரி | சமயம் | : |
| தந்தை பெயர் | ; | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூக்கா | : | | |

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

(சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது)

1. வாதி எனக்கு உறவினர் என்றால் சரிதான். அவரை எனக்கு சுமார் 30 வருடங்களாக தெரியும். பழனிச்சாமி வாதியின் உறவினரா என்றால் இல்லை. சாட்சியம் அளிப்பதற்காக நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். சாட்சியமளிப்பதற்காக வாதிதான் என்னை அழைத்து வந்தார் என்றால் சரிதான். பணத்தை பெருமாக்கவுண்டர் வீட்டில் வைத்து கொடுத்தார்கள். காலை சுமார் 09.00 மணியளவில் பணத்தை கொடுத்தார். நான் காலை சுமார் 08.00 மணிக்கு பெருமாக்கவுண்டர் வீட்டிற்கு சென்றேன். நான் செல்வதற்கு முன்பு சதீஸ்குமார் அங்கு இருந்தாரா என்றால் இல்லை, நான் சென்று சுமார் 10 லிருந்து 30 நிமிடத்திற்குள் வந்தார்.
2. பழனிச்சாமி நான் செல்வதற்கு முன்பே வாதியின் வீட்டில் இருந்தார். எங்கள் மூன்று நபர்கள் தவிர வேறு யாராவது வீட்டில் இருந்தார்களா என்றால் எங்கள் மூன்று நபர்களை தவிர யாருமில்லை, வாதியின் மகன் இருந்தாரா என்று ஞாபகமில்லை. கடனுறுதி சீட்டை யார்

வங்கிவந்தார்கள் என்று எனக்கு தெரியாது. கடனுறுதி சீட்டிற்கான முத்திரை வில்லைகளை யார் வாங்கி வந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கடனுறுதி சீட்டில் முத்திரை வில்லைகள் ஒட்டி கொண்டுவரப்பட்டதா அல்லது வாதியின் வீட்டில் வைத்து ஒட்டப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பணத்தை யார் கொண்டுவந்து கொடுத்தார்கள் என்றால் பெருமாக்கவுண்டர் கொண்டுவந்து கொடுத்தார். கடனுறுதி சீட்டு எழுதி படித்துப்பார்த்தபிறகுதான் பெருமாக்கவுண்டர் பணத்தை கொண்டுவந்து கொடுத்தார் என்றால் சரிதான்.

3. பணத்தை ஆசாரத்தில் உள்ள செல்பிலிருந்து எடுத்துக்கொண்டுவந்து கொடுத்தார். கடனுறுதி சீட்டை எழுதியவர் எங்கு வைத்து எழுதினார் என்றால் ஆசாரத்தில் வைத்து எழுதினார், ஆசாரத்தில் எந்த இடத்தில் வைத்து எழுதினார் என்றால் ஞாபகமில்லை. கடனுறுதி சீட்டை எழுதியவர் எதன்மீது வைத்து எழுதினார் என்றால் மேஜை மீது எழுத வாய்ப்பில்லாததால், நோட்டின் மீது வைத்து எழுதியிருக்கலாம், தற்போது எனக்கு ஞாபகமில்லை. கடனுறுதி சீட்டை எழுதியவர் எப்படி சென்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னை யார் அழைத்து வந்தார்கள் என்றால் நானேதான் இருசக்கர வாகனத்தில் வந்தேன். சதீஸ்குமார் எப்படி வந்தார் என்று எனக்கு தெரியாது. கடனுறுதி சீட்டு எழுதி முடிக்க காலை 09.00 மணி வரை வாதியின் வீட்டில் இருந்தோமா என்றால் ஆமாம்.
4. ரூபாய் 500 பணத்தாள்களாக கொடுக்கப்பட்டது. கடனுறுதி சீட்டிற்கான முகவரிகளை யார் சொன்னார்கள் என்றால் பெருமாக்கவுண்டர் முகவரியை அவரும், சதீஸ்குமார் முகவரியை அவரும் கூறினார்கள். கடனுறுதி சீட்டில் 100 ரூபாய்க்கு 1ரூபாய் வட்டி என எழுதப்பட்டது. யார் சொல்லி வட்டி எழுதப்பட்டது என்றால் பெருமாக்கவுண்டர் சொன்னார். கடனுறுதி சீட்டில் முத்திரை வில்லைகள் மற்றும் அதன் கீழ் எத்தனை கையொப்பங்களை சதீஸ்குமார் செய்தார் என்றால் அதை நான் பார்க்கவில்லை, சாட்சி மீண்டும் ஞாபகமில்லை என்று சொன்னார்.
5. கடனுறுதி சீட்டில் எந்த பேனாவால் எழுதப்பட்டது என்றால் லெட்டால் எழுதப்பட்டது. எந்த நிற மையால் எழுதப்பட்டது என்றால் தற்போது ஞாபகமில்லை. சதீஸ்குமார் கடனுறுதி சீட்டை எழுதியவரிடம் இருந்த பேனாவை வாங்கி கையொப்பம் செய்தாரா அல்லது அவருடைய பேனாவில் கையொப்பம் செய்தாரா என்றால்

தற்போது ஞாபகமில்லை. பழனிச்சாமி எழுதியை பேனாவை வாங்கி நான் கையொப்பம் செய்தேன். கடனுறுதி சீட்டில் பழனிச்சாமி, சதீஸ்குமார் மற்றும் என்னை தவிர வேறு யாராவது கையொப்பம் செய்தார்களா என்றால் தற்போது அது ஞாபகமில்லை. கடனுறுதி சீட்டில் தமிழ்தேதி அல்லது ஆங்கில தேதி எழுதப்பட்டதா என்றால் சாட்சி முதலில் இரண்டும் எழுதப்பட்டது என்றும், பிறகு ஞாபகமில்லை என்றும் சொன்னார். கடனுறுதி சீட்டில் என்ன வாசகம் எழுதப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் படித்துப்பார்த்துதான் கையொப்பம் செய்தேன், தற்போது தெரியாது என்றார், சாட்சி மீண்டும் ஞாபகமில்லை என்று சொன்னார். கடன் தொகை எழுத்தாலும், எண்ணாலும் எழுதப்பட்டுள்ளது. கடனுறுதி சீட்டில் அடித்தல் திருத்தல் இல்லை.

6. பழனிச்சாமியை வாதி வீட்டிற்கு யார் வரச்சொன்னார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. என்னை வாதிதான் அழைத்தார். கடனுறுதி சீட்டில் உள்ள தேதிகளை நாட்காட்டியை பார்த்து எழுதினார். மேற்படி நாட்காட்டி வாதியின் வீட்டுச் சுவரில் மாட்டப்பட்டுள்ளது. நான் சொல்வதுபோல் சதீஸ்குமார் வாதியிடம் கடன் வாங்கவில்லை என்றும், அதற்கு ஆதரவாக கடனுறுதி சீட்டை எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பம் மற்றும் கைரேகை சதீஸ்குமாருடையது அல்ல என்றும், மேற்படி கையொப்பம் மற்றும் கைரேகைகளை மோசடியாக நாங்கள் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வாதி எனது உறவினர் என்பதால் அவருக்காக வேண்டி பொய்யான கடனுறுதி சீட்டின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

| சார்பு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம் | |
|---|---|
| நாள் | 01.10.2024 |
| O.S. No. | 139/2018 |
| வா.சா.3 | கே.எஸ்.பழனிச்சாமி |

2024ம் ஆண்டு அக்டோபர் மாதம் 01–ம் நாள் கே.எஸ்.பழனிச்சாமி என்பவரின் சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1969ம் ஆண்டின் 54வது சட்டப்பிரிவு(2) ஏற்பாட்டின்படி திரு.எஸ்.ஜீவாபாண்டியன்,M.Com.,M.Phil.,M.L., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | கே.எஸ்.பழனிச்சாமி | சமயம் | : |
| தந்தை பெயர் | ; | | தொழில் | : |
| கிராமம் | : | | வயது | : |
| தாலூக்கா | : | | | |

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

(சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது)

1. சதீஸ்குமாரை எனக்கு அடையாளம் காட்ட தெரியுமா என்றால் தெரியும். வாதியை எனது 10 வயது முதலே தெரியும். நான் பால் வியாபாரம் செய்து வருகிறேன். சுமார் 30 வருடங்களாக பெருமாகவுண்டர் என்னிடம் பால்வியாபாரம் செய்துவருகிறார் என்றால் சரிதான். கடன் தொகையை பெருமாகவுண்டரின் வீட்டில் வைத்து கடன் கொடுத்தார். நான் பெருமாகவுண்டர் வீட்டிற்கு எதற்காக சென்றேன் என்றால் அடிக்கடி கடனுறுதி சீட்டு எழுதி கொடுப்பதற்காக சென்றேன். வாதி சுமார் 10 அல்லது 15 நபர்களிடம் வட்டிக்கு கடன் கொடுத்து வருகிறார் என்றால் இருக்கலாம். நான் பெருமாகவுண்டருக்காக சுமார் 4 அல்லது 5 கடனுறுதி சீட்டுக்களை எழுதிக்கொடுத்திருப்பேன். வாதி வட்டிக்கு கடன் கொடுக்கும் தொழில் செய்து வருகிறார் என்றால் சரிதான்.
2. அன்றைய தினம் என்னை யார் அழைத்தார்கள் என்றால்

பெருமாகவுண்டரின் மகன் அழைத்தார். அன்றைய தினம் பெருமாகவுண்டர் என் வீட்டிற்கு வந்தாரா என்றால் இல்லை. கடன் கொடுப்பதற்கு முன்தினமே பெருமாகவுண்டர் மகன் போன் மூலமாக என்னை வீட்டிற்கு வரச்சொல்லி அழைத்தார். நான் கடன் கொடுத்த அன்று காலை சுமார் 08.00 லிருந்து 09.00 மணிக்குள் சென்றேன். நான் அங்கு செல்வதற்கு முன்பே வெள்ளியங்கிரி மற்றும் சதீஸ்குமார் அங்கு இருந்தார்களா என்றால் இருந்தார்கள். அவர்கள் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. அன்றைய தினம் பெருமாகவுண்டர், சதீஸ்குமார், வெள்ளியங்கிரி மற்றும் என்னை தவிர வேறு யாரும் பெருமாகவுண்டர் வீட்டில் இல்லை என்றால் சரியல்ல, முனுசாமி இருந்தார். மேற்படி முனுசாமி நான் செல்வதற்கு முன்பே அங்கு இருந்தார். முனுசாமி எதற்காக பெருமாகவுண்டர் வீட்டிற்கு வந்தார் என்று எனக்கு தெரியாது. நான் வாதியின் வீட்டில் சுமார் 1 மணி நேரம் இருந்தேன். கடனுறுதி சீட்டில் எழுதி படித்து காண்பித்த பிறகு பணம் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை, பணம் கொடுத்த பிறகுதான் கடனுறுதி சீட்டு எழுதப்பட்டது. பணத்தை யார் கொடுத்தார் என்றால் பெருமாகவுண்டர் சதீஸ்குமாரிடம் கொடுத்தார். ரூ.500 பணத்தாள்களாக கொடுத்தார். மேற்படி பணத்தை பெருமாகவுண்டர் ஆசாரத்தை ஒட்டியுள்ள அறையிலிருந்து எடுத்து வந்து கொடுத்தார். ஆசாரத்திலிருந்து பணத்தை பெருமாகவுண்டர் எடுத்து கொடுத்தாரா என்றால் இல்லை.

4. கடனுறுதி சீட்டை ஆசாரத்தில் வைத்து நான் எழுதினேன். நான் இருக்கையில்(சேர்) உட்கார்ந்து, நாட்காட்டி அட்டையை வைத்து எழுதினேன். நாட்காட்டி அட்டையை பெருமாகவுண்டரின் மகன் எடுத்துக்கொண்டுவந்து கொடுத்தார். கடனுறுதி சீட்டை சதீஸ்குமார் வாங்கி வந்தார். நான் கடனுறுதி சீட்டை வாங்கவில்லை என்றால் சரிதான். கடனுறுதி சீட்டில் முத்திரை வில்லைகள் ஒட்டி இருந்தன, நாங்கள் ஒட்டவில்லை. கடனுறுதி சீட்டில் 1 ரூபாய் முத்திரை வில்லைகள் இரண்டு ஒட்டப்பட்டது. சதீஸ்குமார் முத்திரை வில்லையின் மீது 1 கையொப்பம் மட்டும் செய்தார். முத்திரை வில்லைக்கு கீழே கையொப்பம் எதுவும் செய்யவில்லை. கடனுறுதி சீட்டை நீல நிற பால்பாய்ண்ட் பேனாவில் எழுதினேன். சதீஸ்குமார் நான் எழுதிய பேனாவை வாங்கி கையொப்பம் செய்தாரா என்றால் ஆமாம். வெள்ளியங்கிரியும் நான் எழுதிய பேனாவை வாங்கி கையொப்பம் செய்தாரா என்றால் ஆமாம். எங்களை தவிர முனுசாமி

என்பவரும் கடனுறுதி சீட்டில் கையொப்பம் செய்தார். மேற்படி முனுசாமியும் நான் எழுதிய பேனாவை வாங்கி கையொப்பம் செய்தாரா என்றால் ஆமாம்.

5. என்னிடம் காட்டப்படும் கடனுறுதி சீட்டில் உள்ள பூர்த்தி செய்யப்பட்ட பகுதியில் உள்ள பேனாவின் மையும், வெள்ளியங்கிரி கையொப்பம் உள்ள பேனாவின் மையும் வேறுபட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கடனுறுதி சீட்டில் உள்ள பூர்த்தி செய்யப்பட்ட பகுதியில் உள்ள பேனாவின் மையும், முனுசாமியின் கையொப்பம் உள்ள பேனாவின் மையும் வேறுபட்டுள்ளது என்றால் சரிதான். கடனுறுதி சீட்டிலுள்ள சாட்சி கையொப்பங்களின் முகவரிகளை யார் எழுதினார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 100 ரூபாய்க்கு 1 ரூபாய் வட்டி என கடனுறுதி சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி வட்டி பற்றி பெருமாகவுண்டர் சொன்னார்.
6. சாட்சி சொல்வதற்கு முன்பு கடனுறுதி சீட்டின் நகலை நான் பார்த்தேனா என்றால் நான் பார்த்தேன். கடனுறுதி சீட்டில் தமிழ் மற்றும் ஆங்கில தேதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. மேற்படி தேதிகளை நாட்காட்டியை பார்த்து குறிப்பிட்டேன். பெருமாகவுண்டரின் மகன் நாட்காட்டியை என்னிடம் கொண்டுவந்து கொடுத்தார். மேற்படி நாட்காட்டி ஆசாரத்தில் மாட்டியிருந்தது. வட்டி தொகையை எழுத்தால் மட்டும் எழுதியுள்ளேன். கடன் தொகை விவரத்தை எண்ணால் மட்டும் எழுதியுள்ளேனா என்றால் எண்ணாலும் எழுத்தாலும் எழுதியுள்ளேன். கடனுறுதி சீட்டில் அடித்தல் திருத்தல் எந்த இடத்தில் உள்ளது என்றால் ஞாபகமில்லை. கடனுறுதி சீட்டை எழுதி முடிக்க காலை சுமார் 9.30 அல்லது 10.00 மணி இருக்கும். கடன் கொடுத்த தொகையை பெருமாகவுண்டர் யாரிடமாவது வாங்கி கொடுத்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வதுபோல் சதீஸ்குமார் வாதியிடம் கடன் வாங்கவில்லை என்றும், அதற்கு ஆதரவாக கடனுறுதி சீட்டை எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பம் மற்றும் கைரேகை சதீஸ்குமாருடையது அல்ல என்றும், மேற்படி கையொப்பம் மற்றும் கைரேகைகளை மோசடியாக நாங்கள் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வாதி எனக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்காக வேண்டி பொய்யான கடனுறுதி சீட்டின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. மறுவிசாரணை இல்லை.